Registered as a news paper in Ceylon.


# தொண்டன்

கத்தோலிக்க மாத ஏடு.

| மலர் 3 | மட்டக்களப்பு | சித்திரை — 1971 | விலை 30 | இதழ் 4 |
|---|---|---|---|---|

# மண்ணகமடந்தை மயங்க மனுமகன் மாண்டார் சிலுவையிலே

அருட்திரு. வே. அன்ரனி ஜோண் அடிகள்,
பச்சையப்பன் கல்லூரி, சென்னை.



## அன்பின் வடிவம், தியாகத்தின் உருவம், கல்வாரிக் குன்றில்!

மாதங்களில் சிறந்தது மார்கழி என்றும், கிழமைகளில் நல்லது வெள்ளிக்கிழமை என்றும் கூறுவர் மக்கள். உலகமக்கள் அனைவரும் வருடத்தில் ஒருநாளை பெரிய நாள் என்று அழைக்கின்றனர். அதுவே பெரிய வெள்ளிக்கிழமையாகும். ஏன் இந்த நாள் பெரிய நாள்? மறக்கமுடியாத நாள். அன்று தான் உலக வரலாறு ஊனையும், உள்ளத்தையும் உருகவைக்கும் மாபெரும் நிகழ்ச்சியைக் கல்வாரிக் குன்றில் கண்டது. அன்புக்கு வடிவம் வகுத்தவர், தியாகத்துக்கு இலக்கணம் கொடுத்தவர், பொறுமைக்கு எடுத்துக்காட்டாக விளங்கியவர், அனைத்துக்கும், அனைவருக்கும் குணக்குன்றாய், திகழ்ந்தவர், மனுக்குலம் வாழ தன் இன்னுயிரை நீத்தார்.

''நண்பன் ஒருவனுக்காகத் தன் உயிரையே தியாகம் செய்வதைவிட மேலான அன்பு இல்லை'' என்று கூறியவரின் சொல் செயலாக மலர்ந்த நன் நாள் அந்தப் பெரிய வெள்ளிக்கிழமையாகும். பாரி முல்லைக்குத் தேரைக் கொடுத்தான்; பேகன் குளிரால் வாடிய மயிலூக்குத் தன் போர்வையை அளித்தான்; நீண்ட நாள் உயிர் வாழவைக்கும் நெல்லிக்கனியை தான் உண்டு நீண்ட நாள் உயிர் வாழ விரும்பாத அதியமான், ஔவைக்கு அதை உவந்தளித்தான்; சிபி சக்கரவர்த்தி புறுவைக் காப்பாற்றுவதற்காகத் தன் சதையை அறுத்துக்கொடுத்தான்

[12ம் பக்கம் பார்க்கவும்]

''திருச்சட்டத்தை அழிக்கவல்ல...... நிறைவேற்றவே வந்தேன்''

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# இறைவழிபாட்டுச் சிந்தனைகள்

(துணை ஆயர்)

## 24. ஞானஸ்நானமும் விசுவாசமும்

ஞானஸ்நானத்திற்கும் விசுவாசத்திற்குமுள்ள நெருங்கிய தொடர்பை கிறிஸ்து நாதர் தாமே சுட்டிக்காட்டியுள்ளார். அவர் பரலோகத்திற்கு எழுந்தருளுமுன் அப்போஸ்தலர்களை நோக்கி ''நீங்கள் உலகெங்கும் போய் படைப்பிற்கெல்லாம் நற்செய்தியினை அறிவியுங்கள். **விசுவசித்து ஞானஸ்நானம் பெறுபவன் மீட்புப் பெறுவான்.** விசுவாசியாதவனுக்குத் தண்டனை கிடைக்கும். (மாற்கு 16 15–16) என்று கூறினர். இதனால், ஞானஸ்நானம் பெறுவதற்கு விசுவாசம் **அத்தியாவசியம்** என்பது தெளிவாகின்றது. ஆகவே, விசுவாசமில்லாத ஒருவன் ஞானஸ்நானத் திருவருட்சாதனத்தைப் பெறுமதியுடனும் பயனுடனும் பெறமுடியாது. இவ் உண்மையை திருச்சபையின் ஆரம்பத்தில் நிகழ்ந்த ஒரு சம்பவம் தெளிவாக உணர்த்துகின்றது.

எத்தியோப்பிய நாட்டின் அரசியான காந்தாக்கே என்பவளின் பொருளமைச்சன் யெருசலேமுக்குச் சென்று இறைவனை வழிபட்டபின் தனது சொந்த நாட்டிற்குத் திரும்புகையில், தேரில் உட்கார்ந்து இசையாஸ் எழுதிய இறைவாக்குகளைப் படித்துக் கொண்டு சென்றபோது, பிலிப்பு என்னும் திருத்தொண்டர் பரிசுத்த ஆவியால் ஏவப்பட்டு, அவரை அணுகி மேற்குறிப்பிட்ட இறைவாக்குகளுக்கு விளக்கங்கொடுத்து கிறிஸ்துவின் நற்செய்தியை அவருக்குப் போதித்தார். வழியில் தண்ணீர் இருந்த ஓர் இடத்திற்கு அவர்கள் வந்தபோது, ''இதோ தண்ணீர் இருக்கிறது, நான் ஞானஸ்நானம் பெறத் தடை ஏன்ன? என்று அமைச்சர் கேட்டார். அதற்கு பிலிப்பு' **நீர் முழுமனதுடன் விசுவாசித்தால் ஞானஸ்நானம் பெறலாம்**'' என்றார். ''இயேசு கிறிஸ்து கடவுளின் மகன் என்று விசுவாசிக்கிறேன்'' என்று அவர் பதில் சொன்னார். உடனே தேரை நிறுத்தி, பிலிப்பு அண்ணகனுக்கு ஞானஸ்நானம் அளித்தார். (அ. ப. 8, 26-38)

ஞானஸ்நானம் பெற விரும்புகிறவன் என்னத்தை விசுவாசிக்கவேண்டும்? ''நற்செய்தியை'' என்று கிறிஸ்துநாதர் தாமே கூறியுள்ளார். (மாற்கு 16, 15). இந்த நற்செய்தியின் மையப் பொருளாக விளங்குபவர் மீட்பரும் ஆண்டவருமாகிய கிறிஸ்து தாமே. இவ்வுண்மை, பரிசுத்த ஆவி அப்போஸ்தலர்மேல் இறங்கிவந்த தினத்தில் புனித இராயப்பர் யூத மக்களுக்கு நிகழ்த்திய பிரசங்கத்திலிருந்து மிகத் தெளிவாகத் தோன்றுகின்றது. ''புதுமைகள் அற்புதங்கள் அருங்குறிகளால் கடவுளது சான்று பெற்ற இயேசுவை நீங்கள் சிலுவையிலறைந்து கொன்றீர்கள். கடவுளோ அவரை கல்லறையினின்று உயிர்த்தெழச் செய்தார். இதற்கு நாங்கள் எல்லோரும் சாட்சிகள். இங்ஙனம் கடவுளின் வல்லமையால் உயர்த்தப்பெற்ற அவர், வாக்களிக்கப்பட்ட பரிசுத்த ஆவியைத் தந்தையிடமிருந்து பெற்றுப் பொழிந்தருளினர். இப்போது நீங்கள் காண்பதுவும் கேட்பதுவும் இதுதான். எனவே, நீங்கள் சிலுவையில் அறைந்த இந்த யேசுவை கடவுள் ஆண்டவரும் மெசியாவுமாக ஆக்கினர். உங்கள் பாவங்களுக்கு மன்னிப்படைய மனந்திரும்பி இயேசுகிறிஸ்து கட்டளையிட்டபப்டி நீங்கள் ஒவ்வொருவரும் ஞானஸ்நானம் பெறுங்கள்'' புனித இராயப்பருடைய அறிவுரையை ஏற்றுக்கொண்டவர்கள், அதாவது ஏறத்தாழ 3000 பேர் ஞானஸ்நானம் பெற்று திருச்சபையில் சேர்ந்தனர். (அ. ப. 21.22–41).

இம்முறையைப் பின்பற்றித்தான் ஞானஸ்நானம் பெறப்போகிறவர்கள் நற்செய்தியின் சுருக்கமாகிய **விசுவாசப் பிரமாணத்தை** அறிக்கையிட வேண்டுமென்று திருச்சபை பணித்துள்ளது. பழைய காலத்தில் ஞானஸ்நானம் பெற விரும்பியவர்கட்கு பாஸ்கா பெருவிழாவின் ஆயத்தக் காலமாகிய **தவக்காலத்தில்** விசுவாசப் பிரமாணத்தின் **விரிவான விளக்கம்** அளிக்கப்பட்டது. ஈற்றில், பாஸ்கா திருவிழிப்புக் கொண்டாட்டத்தின்போது அவர்கட்கு ஞானஸ்நானம் ஆடம்பரமாக அளிக்கப்பட்டது. ★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# போனால் போகட்டும்......

அன்றொருநாள் கடைத்தெருவிற்குப் பத்திரிகை வாங்கப் புறப்பட்டேன். வழியில் அமைந்துள்ள, மருந்துக்கடைக்குள் ஒரு பெண் அவசரமாக கண்ணாடி அலுமாரிகளைத் துழாவியபடி, கடைக்காரனிடம் எதைப்பற்றியோ விசாரிப்பதைக் கவனித்தேன். போன காரியத்தை முடித்துக்கொண்டு கால்மணி நேரம் கழித்து, அவ்வழியே திரும்பும்போது, அந்த அம்மாள் முகம் சுருங்க, வேதனையுடன் கடையிலிருந்து வெளிப்பட்டதைக் கண்டதும் நெஞ்சில் ஆவல் எழுந்தது. கடையின் உள்ளே சென்று, ''ஐயா, என்ன பொருள் அந்த அம்மாளுக்குக் கிட்டாத ஏமாற்றத்தில் போகின்றாள்?'' என்றேன் மெதுவாக.

அவனோ அலட்சியமாக, ''அம்மாவின் தலையிலேயுள்ள கேசம் கொட்டுகின்றதாம். இருப்பதுவும் விரைவாக நரைக்கின்றதாம். இவற்றைத் தடுக்க, எண்ணெய் வகையைத் தேடினாள்... பத்திரிகைகளில் விளம்பரப்படுத்திய சகல கேசவர்த்தினிகளையும் பிழையின்றி ஒப்பித்தாள். ஆனால், என்ன செய்யலாம்?.... இங்கிருப்பவை, அவள் பாவித்த, பலனளிக்காத வகை எண்ணெய்களாம்.... சலிப்புடன் வேறுகடைக்கு நடையைக் கட்டுகின்றாள்....'' என்றான்.

ஆமாம்! கடைக்காரனின் அலட்சியம் எமக்கும் ஏற்படுவதில் என்ன தவறு.... ஆனால் கூந்தலின் அருமை அந்த அம்மாளுக்கல்லவா தெரியும்? இயற்கைக் கூந்தல் தலையில் இருக்க மறுத்துவிட்டால், செயற்கைக் கூந்தலை இருக்கும் கூந்தலுடன் பொருத்துவாள். ஆனால்.... வெளியே செல்லும் போது, ''இந்த அம்மணி, தன்னுடைய கூந்தலுக்கு என்ன எண்ணெய் தடவுகிறாள்?'' என்று பையன்கள் பரிகாசம் செய்யும்போது, அவமானப்படப் போகின்றவள் அவளல்லவா?

இன்று முளைத்து, நாளை பழுத்து, மறுநாளோ, அல்லது அதற்கடுத்த நாளோ உதிர்ந்து போகும் இக் கூந்தலுக்குச் சிரத்தை எடுக்கும் மனித இனம், ஏன் என்றும் நிலைக்கப்போகும் 'ஆன்மா'வின் விடயத்தில் அவ்வளவு அசிரத்தையாக இருக்க வேண்டும்?

''வாழ்வானது மாயம்? மண்ணாவது திண்ணம்!'' இந்த வாக்கியந்தான் எத்தனையோ மனிதர்களின் தாரக மந்திரம்.... அறிவிலியே, உன் மந்திரத்தில் இதையும் சேர்த்துக்கொள் அதை உணர்ந்து படி.... மறுவுலகம் போவோம், மனுமகனால் தீர்ப்பிடப் படுவோம்!

உடல்தான் மண்ணாகும்.... ஞானஸ்நானம் பெற்றபோது கிடைத்த அருள்உயிர் என்னாகும்? இழத்தற்கரிய திரவியமாம் ஆன்மா என்னாகும்? இப்போதே யோசித்து விடு. இல்லாவிட்டால், காலம் கடந்து விட்டதே! என் செய்வேன்? என்று மனம் புண்ணாவாய்.

ஆன்மா அழியாது.... அப்படியானால், இந்த அழிவு பெறும் உடலைவிட்டு, அழியாத ஆன்மாவை அழகுபடுத்தல் அவசியமல்லவா? என்ன செய்யலாம்?

மனக்கதவைத் தட்டிப்பார்.... மனச்சாட்சி எட்டிப்பார்க்கும்.... தட்டிக்களிக்காதே இனியும் அதை.... பெட்டிப்பாம்பாக ஒடுக்கி, அதன் கெட்டித்தனத்தையே மட்டந்தட்டியிருந்தால், இவ் வருடத்திலாவது சுதந்திரமாகச் செயற்பட முற்படு!

நடந்தவை, கடந்தவைகளாகப் போகட்டும்! நடக்கப் போவதாவது நல்லதாக அமையட்டும்!

அன்றொருநாள்.... ''பன்னிருவருள் ஒருவனான இஸ்காரியோத்து எனப்படும் யூதாசுக்குள் சாத்தான் புகுந்தான். தலைமைக் குருக்களிடமும், காவல் தலைவர்களிடமும் சென்று, தான் யேசுவை அவர்களுக்கு எப்படிக் காட்டிக் கொடுக்கலாம் என்பதைப் பற்றிக்கலந்து பேசினான். அவர்கள் மகிழ்ச்சியுற்று, அவனுக்குப் பணம் கொடுக்க உடன்பட்டார்கள். அவனும் ஒப்புக்கொண்டு கூட்டம் இல்லாத போது அவரைக் காட்டிக்கொடுக்க வாய்ப்புத் தேடிக் கொண்டிருந்தான்''.... என்று பரிசுத்த சுவிசேஷகர் லூக்காஸ் யூதாசைப் பற்றி நான்கு வசனங்களில், நன்றி கெட்ட தனத்தைப் பற்றி நவில்கின்றார்.... ஆனால், அவர் மட்டுமல்ல, நான்கு நற்செய்தி ஆசிரியர்களுமே கூறியுள்ளார்கள்.... அந்த நான்கு சுவிசேஷகர்களும் இன்று எம்மிடையே வாழ்

**செல்வி. றெ. விலியம்ஸ், திருமலை.**

[4ம் பக்கம் பார்க்கவும்]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

## போனால் போகட்டும்......

[3ம் பக்கத் தொடர்ச்சி]

வார்களானால்.... "அன்று நாம் கண்டதும், நமது ஆண்டவரை, அநீதிமான்களின் முன் கையளித்த, காட்டிக் கொடுத்த பாதகன் குட்டியூதாசை.... இப்போதுதான் உண்மையாக, பணப்பித்துக் கொண்ட, பாவங்களைப் புரிவதில் பயமே இல்லாத, ஒன்றுக்குப் பன்முறை விரோதிகளிடம் கையளிக்கும் யூதாஸ்களைக் காண்கின்றோம்" என்று கூறுவார்கள் என்பதில் துளியும் சந்தேகமில்லை.

ஏன்? யூதாஸ் அன்று ஆசைப்பட்டது முப்பது வெள்ளிக் காசுகளுக்குத்தான். ஆனால், நாம் என்ன செய்கின்றோம்? அன்றாட அலுவல்களில் பணத்தைப் பெற பாவ வழிகளை நாடுகின்றோம்....பிடிபட்ட படியால் தான் "யூதாஸ் துரோகி" என்று உலகு தூற்றுகின்றது. பிடிபடாத யூதாஸ்களாக இன்னும் நாங்கள் வாழ்ந்து கொண்டே இருக்கின்றோமல்லவா?

மனுமகனைக் காட்டிக்கொடுக்க, அவன் கலந்தாலோசித்து, சந்தர்ப்பத்தை எதிர் பார்த்தான்.... அன்று.... ஒரு யூதாஸ், ஒரு முறை ஆண்டவரைக் காட்டிக்கொடுக்க, ஒரு சிலருடன் கலந்தாலோசித்து அதன்படியே காட்டியும் கொடுத்தான்....

ஆனால்.... பல யூதாஸ்கள், பலருடன் கலந்தாலோசித்து, ஒரு முறை, இரண்டு முறைகளல்ல. ஆனால் ஆயிரக்கணக்கான தடவைகளாக காட்டிக் கொடுத்துக் கொண்டிருக்கின்றார்களே! ஒருவனின் குற்றத்தை நால்வர் எடுத்துக்கூறினார்கள்....இத்தனை பேரின் குற்றத்தையும் எடுத்துரைக்க முடியாததென்று தானோ, எழுதாத குற்றங்களாக, கண்டிக்கப்படாத குற்றங்களாக, எம்மால் இவை இன்னும் செய்யப்படுகின்றன?

"யூதாசே! முத்தமிட்டோ மனுமகனைக் காட்டிக்கொடுக்கின்றாய்?" என்றார் யேசு. தன்னுடைய சீஷனாக, அவர் ஏற்றுக்கொண்டார் யூதாசை. ஆனால் குருவையே குற்றக் கூண்டில் ஏற்றினான் யூதாஸ்....ஒரு முறை முத்தமிட்டுக் காட்டிக்கொடுத்தான்....ஆனால் எத்தனை முறை சிநேகம் காட்டி விநயம் செய்கின்றோம். எமது தேவை நிறைவேறும் வரை ஒருவருடன் பழகிவிட்டு, பின்னர் அகன்று விடுகின்றோம்.... தவறாமல் பூசை காண்போம்.... ஆனால் அண்டை மக்களுடன் எவ்விதமான தொடர்பை ஏற்படுத்துகின்றோம்....?

ஒரு நாள் ஆண்டவரும் எம்மைப் பார்த்து, "அன்னம்மா!, அலோசியஸ்!, எனக்கு நேசம் காட்டியா துரோகம் செய்கின்றாய்....? என்று கேட்பார்.

லூக்காஸ் சுவிசேஷம், 22ம் அதிகாரத்திற்கு வருவோம். "இராயப்பர் மும்முறை மறுதலிக்கின்றார்" என சுவிஷேசகர் குறிப்பிட்டுள்ளார்.

ஊழியக்காரி அவரைக் கண்டு, "இவனும் அவனுடன் இருந்தான்" என, அவரோ "எனக்கு அவரைத் தெரியாதம்மா என்று மறுத்தார். வேறொருவன் அவரைக் கண்டு, நீயும் அவர்களுள் ஒருவன்தான்" என, இராயப்பரோ "இல்லையப்பா" என்றார். இன்னொருவன், உண்மையாகவே, இவனும் அவனோடு இருந்தான், ஏனெனில் இவன் கலிலேயன்தான்" என்று அழுத்தமாகக் கூறினான். இராயப்பரோ, "நீ சொல்வது எனக்குத் தெரியாதப்பா" என்றார்.

பெண்ணைக் கண்டு இராயப்பர் மனம் பேதலித்தாரே.... என்றெண்ணி நகையாடுவோம்.... ஆனால் எமது அன்றாட வாழ்கையை ஏட்டில் பதித்தால், வருங்கால சமுதாயம், இராயப்பரின் மறுதலிப்பை எண்ணி ஒரு முறை சிரிக்கும்.... மிஞ்சினால் ஓருசில நாட்களுக்குச் சிரிக்கும்.... எம்மைப்பற்றி வாழ் நாள் பூராவுமே சிரிக்க வைக்கக் கூடிய இழிவான வாழ்க்கையல்லவா நாம் வாழ்கின்றோம்?

குற்றங்கள் ஏன் குறிக்கப்பட்டன? அவை நல்லதல்ல, தவிர்க்கப்பட வேண்டுமென்பதை உணர்த்துவதற்கே! அதை நாம் தப்பான கோணத்திற் பார்க்க முயல்வதாற்றான், தப்பறையான பாதையில் வாழ்கின்றோம்......... இனியாகிலும் சரியான பாதையில் நின்று சிந்திப்போம்.

இராயப்பர் மறுதலித்தார்........ ஆனால் மனம் நொந்து, பின்னர் திருந்தினார். குற்றம் செய்வது மனித இயல்பென்று நம்மை நாம் தேற்றிக்கொள்வதுடன் நில்லாது, மன்னிப்பது கடவுளியல்பு என்றெண்ணிக் குற்றங்களைக் களைவோம்.... புனித மனிதர்களாக வாழ முனைவோம்.... முயற்சி செய்வோம்.

நமதாண்டவர், நாம் எப்படிப்பட்டவராக இருக்கவேண்டுமென எதிர்பார்க்கின்றார்? .... "என்னை நோக்கி, 'ஆண்டவரே, ஆண்டவரே' என்று சொல்பவனெல்லாம்

[5ம் பக்கம் பார்க்கவும்]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

## போனல் போகட்டும்......

[4ம் பக்கத் தொடர்ச்சி]

விண்ணரசு சேரமாட்டான். வானகத்திலுள்ள என் தந்தையின் விருப்பப்படி நடப்பவனே சேருவான்''. எனவே நாம் அவரைப் பின்தொடர விரும்பினுல், அவரது சித்தத்தை நிறைவேற்றத் தயாராக இருக்கவேண்டும்.... ஏனெனில் வாழ்வுக்குச் செல்லும் வாயில் ஒடுக்கமானது.... வழி எவ்வளவோ இடுக்கானது.... இதைக் கண்டுபிடிப்பவரும் சிலரே....

இரண்டு கண்கள், இரண்டு காதுகள், இரண்டு கைகள் என்று படைத்த இறைவன், ஏன் ஒரேயொரு நாவைப் படைத்தான்? நன்முகப் பார், நிறையக் கேள், ஆனுல் அளவுடன் பேசு என்பதை அறிவுறுத்தவோ என்னவோ! உன் காதுகள் நல்லவற்றைக் கேட்டு பல நாளாகி இருக்கலாம்; கண்கள் நல்லவற்றைப் பார்த்து பல நாளாகி இருக்கலாம்; நல்லவற்றைப் பேசுவதை உன் நா மறந்திருக்கலாம். லஞ்சம் வாங்குவது, கொடுப்பதிலேயே தேர்ச்சி பெற்றிருக்கலாம் உன் கரங்கள்.... தீய பாதைகளிற் சென்றே பழக்கப்பட்டிருக்கலாம் உன் பாதங்கள்....

காதுகள் நல்லவற்றைக் கேட்க, கண்கள் பயனுள்ளவற்றைப் பார்க்க, களங்கமில்லாதவற்றைக் கரங்கள் புரிய, பாதகங்களை நாடிச் செல்லும் பாதங்களைத் தடுக்கும் சக்தி, உன்னிடமே இருக்கின்றது........ அதுதான் உன் மனம்.

இதுவரை காலமும் நாம் யூதாஸ்களாக வாழ்ந்திருக்கலாம்; மறுதலித்துக்கொண்டிருக்கும், இராயப்பராக வாழ்ந்திருக்கலாம்........ ஆனுல் காலம் கடந்துவிடவில்லை.

''நல்ல பழம் கொடாத மரங்களெல்லாம் வெட்டுண்டு தீயில் போடப்படும்''. எனவே நாம் அவரது சீடர்களாக வாழும் வழியைக் காணவேண்டுமானுல் எமது மனம் முதலில் மாறவேண்டும், மாற்றப்படவேண்டும்.

''வந்தது தெரியும், போவது எங்கே? வாசல் நமக்கே தெரியாது'' என்று பாடித் திரியும் பாமரக் கூட்டங்களாக, நாம் இனியும் வாழாமல், ''போவோம் புதுவுலகம்'' ''காண்போம் கடவுளரசை'' என்ற புது மெருகுடன் வாழ்வை ஆரம்பிப்போம்.

பாவச் சுமைகள் போகட்டும்; போய்த் தொலையட்டும்; நல்லவை வரட்டும், நன்மை பலவும், நிறைந்தோங்கக் கூடிய, நிறைவான வாழ்வை, வரப்போகும் காலத்திலாவது, நிறைவேற்றத் தெண்டிப்போம். ★



## தேவாலயத்தின் திரைச்சீலை கிழிந்ததேன்?

—O—

(செல்வி அருள்ஜோதி அன்ரனி – மூதூர்.)

மனுக்குலத்தை இரட்சிக்க அவனியில் அவதரித்த நம் தேவனும் யேசுபிரான் மரித்த வேளை பற்பல அசம்பாவிதங்கள் நிகழ்ந்தன. பூமி அதிர்ந்தது; கல்மலைகள் பிளந்தன; கல்லறைகள் திறக்கப்பட மரித்தவர்கள் உயிர்த்து அநேகருக்குத் தரிசனையானுர்கள். அதோடல்லாமல் தேவாலயத்தின் திரைச்சீலைகூட மேலிருந்து கீழாக இரண்டாகக் கிழிந்தது.

பூமி அதிர்ச்சியும், கல் மலைகள் பிளவும் மரித்தவர் உயிர்த்தெழுவதும் யேசுநாதர் உண்மையான தேவன் என்பதால் நிகழும் நிகழ்ச்சிகள் என்று எடுத்துக்கொண்டாலும், திரைச்சீலை கிழிந்ததின் மர்மம்தான் என்ன?

யூதரில் பரிசேயர், சதுசேயர், வேதபாரகர் போன்ற வகுப்புவாதிகள் ஆளுக்கொரு கொள்கை கொண்டவர்களாய் இருந்தார்கள். இவர்கள் கடவுளின் மகிமையை நன்முக உணராமல் இருந்தார்கள். இவற்றை உணர்வதற்கு அவர்கள் மனத்திலே ஒரு திரை தடையாக இருந்தது. இத்திரை அகற்றப்பட்டால் தான் மனிதன் கடவுளை அறியமுடியும், நேசிக்கமுடியும். கர்த்தர் உயிரோடிருந்து போதித்துவந்தபோது அவர்கள் இவரை கடவுள் என்று உணரவில்லை. மனத்திரை தடுத்தது. மரித்தபோது அவர்களுடைய மனத்திரை கிழிந்தது என்பதற்குச் சான்முகவே தேவாலயத்தின் திரைச்சீலை கிழிந்தது. ஏனென்முல் அவர் மரித்தபின்பு நடந்த நிகழ்ச்சிகளைக் கொண்டு இவரே உண்மையான தேவசுதன் என்று விசுவசித்தார்கள் அந்த யூதர்கள். பழைய உடன்படிக்கையின் வழிபாடு முடிவடைந்தது என்பதற்கும் தேவாலயத்தின் கிழிந்த திரைச்சீலை ஓர் அடையாளமாகும். ★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# தேவ ஆலயம் செபத்தின் வீடு

(துரை)

நசரேனனான யேசுவின் உலகவாழ்வின் முடிவு கிட்டியது. அன்று 30ம் வருடம் சித்திரை 1ம் நாள். அன்று காலைதான் எருசலேமிலே யூத மக்கள் அவருக்கு ஒரு அமோகமான வரவேற்பு அளித்தார்கள். அதை அவர் பயன் படுத்தி மீளவும் தாவீதின் சிங்காசனத்தை ஸ்தாபிப்பார் என்று எதிர்பார்த்தனர் மக்கள். ஆனால் அவரோ வேறு அலுவலிலே கருத்தாயிருந்தார். அமைதியாக ஆலயத்திலே உலாவிவந்தார். எல்லாவற்றையும் அவதானித்தார். பொழுது தாழத் தனது சீடருடன் பெத்தானியாவுக்குப் போய் விட்டார்.

மறுநாள், திரும்பவும் யெருசலேமுக்கு வந்தார். வரும் வழியிலே இலைகள் நிறைந்து கனிகள் இல்லாமலிருந்த அத்திமரமொன்றைச் சபித்தார். தேவாலயத்திலே அவர் முதல் நாள் அவதானித்த அநாசார அலங்கோலமெல்லாம் அப்படியே நடைபெற்றுக் கொண்டிருந்தன. பகுத்தறிவுள்ள மனிதர் அறிவிலா விலங்குகளிலும் கேடாக அங்கு நடமாடிக்கொண்டிருந்தார்கள். கடவுளின் ஆலயத்துக்குச் செய்யும் அவமானத்தின் கனாகனத்தை விளங்கக்கூடிய ஒருவர் அவரே சினங்கொண்டார். தேவனின் உரிமைக்காக வாதாட உறுதி பூண்டார். விலைக்கு நின்ற ஆடுமாடுகளைச் சவுக்காலடித்து விரட்டினார். நாணயம் மாற்றுபவர்களின் பலகைகளையும், புறு விற்பவர்களின் இருக்கைகளையும் கவிழ்த்தார். பொருட்கள் விற்பவர்கள் வாங்குபவர்களைத் துரத்தினார். எந்தப் பண்டத்தையும் கோவில் வழியாகக் கொண்டு போகாது தடுத்தார். ''என் வீடு எல்லா இனத்தாருக்கும் செபத்தின் வீடு எனப்படும்'' என்று எழுதியிருக்கிறதல்லவா? நீங்களோ அதைக் ''கள்வர் குகை'' ஆக்கிவிட்டீர்கள் என்று போதிக்கலானார்.

இந்த மிடுக்கான செயலைக்கண்ட அதிகாரிகள் திடுக்கிட்டார்கள். இத் திடாரிக்கத்தைத் தொடரவிடவா? முடியாது. அவரை எப்படித் தொலைக்கலாம், என்று வழி தேடினார்கள். கிறிஸ்துவின் வாழ்க்கைக்கு முற்றுப் புள்ளி வைக்க முக்கிய காரணமான இச் செய்கையை விமரிசையற்ற கிரியையென்று சொல்வார்கள் உலக ஞானிகள். வெண்ணெய் திரண்டுவரத் தாழி உடைந்தது போல், யூத மக்கள் திரண்டுவந்து அவரை வரப்போகும் மெசியாவும் அரசருமென்று ஆர்ப்பரித்து உலகவெற்றிக்கும் மகிமைக்கும் வழிகோலும் நேரத்தில் அவர் அதிகார பீடத்தைத் தாக்கி அழிவைத் தேடிக்கொள்ளலாமா? எனினும் செய்தாரே. திடீர் எழுச்சி உணர்ச்சியினாலா? இல்லையே. ஆறி ஆராய்ந்து அடுத்த நாளல்லவா முறைப்படி தாக்கினார்.

இத்தரம் காத்திரமான கிருத்தியத்தின் காரணத்தை அறிந்தால் மாத்திரம்தான் கிறிஸ்துவின் மனோ நிலையை, அவர் வாழ்க்கையின் உட்பொருளை நாங்களும் விளங்க முடியும்.

யூத குலத்தைச் சேர்ந்த, குருக்கள் தவிர்ந்த ஆண்களெல்லாம் யெருசலேம் தேவாலயத்துக்கு வரி செலுத்தக் கடமைப் பட்டவர்கள். வருடத்துக்கு அரை ஷெக்கல், அதாவது கிட்டத்தட்ட இரண்டு நாள் உழைப்பு கொடுக்க வேண்டும். இந்த வரி கடுமையாக அறவிடப்பட்டது. அவ்விதம் ஆலயத்துக்குக் கிட்டத்தட்ட வருடத்தில் 75,000 பவுண் வருமானம் சேருமாம். இது, மற்றும் பத்திலொன்று காணிக்கைகள், பலிப் பொருள்கள் புற நீங்கலாகவென்க. இவற்றால் யெருசலேம் தேவாலயத்தின் திரவிய சாலை பெருரொக்கங்களால் நிறைந்திருந்தது. கி. மு. 54–53ல் கிறஸ்ஸஸ் எனும் ரோமானிய தளபதி அந்தக் கோவிலிலே கொள்ளையடித்த தொகை 25,00,000 தங்கப் பவுண் என்கிறார் யோசவஸ்.

இந்த வரியைச் செலுத்த விசேஷ கோவில் நாணயம் உபயோகிக்கப்பட்டது. ஏனெனில் யூதர்கள் விக்கிரக ஆராதனைக்குப் பயந்து கோவில் வரிக்கோ, காணிக்கைக்கோ தலைமுத்திரையுள்ள இதர நாணயங்களை ஏற்றுக்கொள்ள மாட்டார்கள். எனவே, பிற நாடுகளிலிருந்து உலகின் ஒரே தேவாலயத்துக்கு வரும் யூத மக்கள் பணம் மாற்ற வேண்டியிருந்தது. அதற்கு மாற்றுக் கூலியாக அரை நாட் சம்பளம் முடிந்தது. இப்படியான

[7ம் பக்கம் பார்க்கவும்]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# தேவ ஆலயம் செபத்தின்...

[6ம் பக்கத் தொடர்ச்சி]

கூலியால் வருடத்திலே 8,000 முதல் 9,000 பவுண் வரை வசூலிக்கப்பட்டது. கொண்டு வந்த வெள்ளி நாணயம் தேய்ந்து போயிருந்தால் மேலும் விவாதமும் ஏற்படுவது சகசம். இவ்விதமாக, யாத்திரிகளுக்கு உதவும் வண்ணம் உண்டான பண மாற்றுக் கடைகள் கொள்ளையடிக்கும் தாபனங்களாக மாறிவிட்டன. அதோடு வாக்குவாதமும் சத்தம் சந்தடியும் அந்த இடத்தை அங்காடியாக மாற்றிவிட்டது.

மறு பக்கத்திலே ஆடுமாடு, புருக்கள் விற்கிறவர்களுடைய ஆரவாரம். யூத மக்கள் மீட்புக் கடனுக்கும் பலி செலுத்தும் காணிக்கைக்கும் இந்த மிருகங்கள், பட்சிகளைப் பயன்படுத்தினர்கள். நீரோ மன்னன் காலத்தில் ஒரு பாஸ்காப் பெருநாளுக்கே 2,56,500 ஆடுகள் பலியாயின. இரத்தப்பலி தினமும் நடைபெற்றது. மிருகங்கள் பழுதில்லையென்று பணங்கொடுத்துப் பரிசோதிப்பிக்க வேண்டும். கோவிற் கடையில் வாங்கினல் தள்ளுபடியாகும் பயமில்லை. ஆனல் விலையோ சில வேளை வெளியிலும் பார்க்கப் பத்துமடங்காகத்தானுமிருக்கும். இங்கேயும் யாத்திரிகளுக்கு நன்மை செய்வது போல மோசடி நடைபெற்றது.

ஏரோதினலே புதுப்பித்துப் பெருப்பித்துக் கட்டப்பட்ட தேவாலயம், கிறிஸ்துவின் காலத்திலே பல முற்றங்களாலே சூழப்பட்டிருந்தது. (1) அந்நிய சாதியாரின் முற்றம். இதற்கு மேலே யூதரல்லாதார் போனல் மரண தண்டனைக்குள்ளாவார்கள். (2) பெண்கள் பலி செலுத்த மாத்திரம் அதன் மேலே செல்லலாம். (3) இஸ்ருயேலர் முற்றம். இங்கு நின்றுதான் காணிக்கைப் பொருட்களைக் குருக்களிடம் கொடுக்கவேண்டியது. (4) குருக்களின் முற்றம். இங்குதான் அக்கினியாக பீடம் நிறுவப்பட்டிருந்தது (5) திட்டமான தேவாலயக் கட்டிடம். இதின் பரிசுத்த ஸ்தானத்துள்ளே தினமும் குருக்கள் தூபமிட்டுக் காணிக்கையப்பமும் வைப்பார்கள். மேற்குப் பக்கத்திலிருந்த ஆதி மூலத்துள்ளோ வருடத்துக்கொருமுறை, பிராயச்சித்த தினத்தன்று, பெரிய குரு மாத்திரம் போகலாம்.

முழுத் தேவாலய வளவிலும் ஒழுங்கு முறையை கவனிக்குமாப்போல வடமேற்கு மூலையிலே அந்தோனியா கோட்டை நிமிர்ந்து உயர்ந்து நின்றது. இங்கு திருவிழாக்காலங்களில் ருேமானிய சைனியம் காவல் புரிந்து வந்தது.

மிஷ்னுவின் ஒழுங்குப்படி தேவாலய முற்றங்கள் புனிதமானவை. தூசிபடிந்த காலோடோ, துணி மணி, தடி தண்டுடனே பரிசுத்த மலை மேலே போகப்படாது. அதை எவரும் குறுக்குப் பாதையாக பயன்படுத்தக் கூடாது. அங்கு ஒருபோதும் எச்சில் துப்பப்படாது. ஆனல், யேசுவின் காலத்தில் யெருசலேம் பட்டணத்துக்கும் ஒலிவ மலைக்கும் குறுக்குப் பாதையாகக் கோவில் முற்றம் பயன்படுத்தப்பட்டது.

தேவாலய மேட்டின் மூன்றில் இருபங்கான அந்நியர் முற்றத்திலேதான் பெரிய குருக்களான அன்னஸ் குடும்பத்தாருக்குச் சொந்தமான வியாபாரக் கடைகள் நிறுவப்பட்டுச் சந்தை நடைபெற்றது. ஆடுகளும், மாடுகளும், புருக்களும், நாணயங்களும், விற்போரும் வாங்குவோரும் ஒன்று சேர்ந்தால் எவ்வித சத்தம் சந்தடி உண்டாயிருக்கும்; அந்த இடம் என்ன அல்லோல கல்லோலப் பட்டிருக்கும் என்று எவரும் யூகிக்கலாம். இது தோவாலயத்தின் பிரதான நோக்கத்தையே வியர்த்தமாக்கியது.

இசையாஸ் இறை வாக்கினர் பபிலோனிய அடிமைத் தனத்திலே தவித்த யூத மக்களுக்கு ஆறுதல் சொல்லும்போது புதிய தேவாலயத்தின் சிறப்பைப் புகழ்ந்துரைக்கிருர்: ''செபமும் பலியும் காணிக்கையும் எனக்கு உகப்பாயிருக்கும். ஏனெனில் எனது வீடு சகல சாதி சனங்களுக்கும் செபத்தின் வீடு என்று அழைக்கப்படும்.'' ஆனல், ஏலவே எரேமியாஸ் இறை வாக்கினர் யூதரை எச்சரிக்கிருர்: ''நீதியைக் கைவிட்டு அநியாயம் எல்லாம் செய்கிறீர்கள். அதோடு தேவாலயமும், தகனப்பலியும் உங்களுக்கு உதவுமா? எனது பெயர் அழைக்கப்படும் வீடு உங்கள் முன்னே கள்வரின் குகையாக மாறிவிட்டதா?' ஆலயத்தில் நடக்கவேண்டிய இறை வழிபாடு பொருளாசையால் வெறும் வியாபாரமாக மாறிவிட்டது. அன்பு ஆளவேண்டிய ஆலயத்தில் அநியாயம் ஏறி அமர்ந்துகொண்டது.

''அடையாள நடிப்பு'' இறை வாக்கினருக்கு வழப்பமான பாடமுறை. கிறிஸ்துவும் அதைப் பலமுறை உபயோகித்திருக்கிருர். இங்கு, கடவுளின் மகிமை மட்டில் நாம் கொள்ளவேண்டிய வேகமான ஆவலைத் திடமுடன் நடித்துக் காட்டுகிருர். ''தெய்வத்தைச் சாட்டிப் பூதம் பணியும்'' பழக்

[8ம் பக்கம் பார்க்கவும்]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# மட்டக்களப்பு கத்தோலிக்க பிராந்தியசபை அத்தியட்சகருக்கு பிரிவுபசாரம்.

மட்டக்களப்பு கத்தோலிக்க பிராந்திய சபையின் அத்தியட்சகராக கடந்த 8 வருட காலமாகச் சேவையாற்றி அண்மையில் திருமலைக்கு மாற்றலாகிச் செல்லவிருக்கும் அருட்திரு ஜே. அலெக்சாண்டர் அடிகளார்க்கு சென்ற 4-3-71ல் பிராந்திய சபையினரால் ஒரு பிரிவுபசாரமும், தேநீர் விருந்தும் அளிக்கப்பட்டது.

மட் / கத்தோலிக்க பிராந்தியசபைத் தலைவர் திரு. எஸ். அந்தோனிப்பிள்ளை அவர்களின் தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் பிராந்தியத்திலுள்ள எல்லாப் பங்குத் தந்தையர்களும், பங்குச் சபைகளின் உறுப்பினர்களும், கல்வி ஸ்தாபனத் தலைவர்களும் கலந்துகொண்டனர். புதிய அத்தியட்சகர் அருட்திரு. பீலிக்ஸ் வீரசிங்க அடிகளும் பங்குகொண்டனர்.

புளியந்தீவு, புளியடிக்குடா, தாண்டவன்வெளிப் பங்குகளின் தலைவர்கள், அருட்திரு. அலெக்சாண்டர் அடிகளின் அரும்பெரும் சேவைகளைப் பாராட்டி வாழ்த்துரைகள் வழங்கியதுடன், புதிய அத்தியட்சகர் அவர்களையும் உற்சாகமாக வரவேற்றனர்.

இல்லறத் தூதுவர் திரு. யேசுராசா குழுவின் பாடல்களுடன் நடைபெற்ற தேநீர் விருந்துக்குப்பின் திருமலை - மட்டக்களப்பு மறைமாவட்டத் தலைவர் திரு. பொ. இராமலிங்கம் அவர்களின் பேச்சும், தொடர்ந்து அருட்திரு. பீலிக்ஸ் வீரசிங்க அடிகளின் பதிலுரையும் நிகழ்ந்தது. தமக்கு அளிக்கப்பட்ட வரவேற்பிற்கும், உற்சாகமான ஒத்துழைப்பு வாக்குறுதிகட்கும் நன்றி கூறி, நமது மறைமாவட்ட ஐக்கிய சங்கமோ, அல்லது பிராந்திய சபைகளோ வெறும் பேச்சுக்களிலும், சிறிய பயனற்ற கருமங்களிலும் காலத்தை வீணாக்காமல், ஆக்கபூர்வமான பயன்தரும் செயல்களில் ஈடுபடவேண்டும் என்றும், அதற்குத் தமது பூரண ஆதரவை அளிப்பதாகவும் கூறி, சபையின் ஒத்துழைப்பை வேண்டிக்கொண்டனர்.

ஈற்றில், அருட்திரு. அலெக்சாண்டர் அடிகளார் தமக்களிக்கப்பட்ட உபசாரத்திற்கும் அன்பளிப்புக்கும் நன்றிகூறி, தாம் பிரிந்து சென்றாலும் தொடர்ந்து சேவை செய்யத் தயாராயிருப்பதாகக் கூறி, தம் எதிர்கால சேவைகட்கு இறைவனின் அருளை வேண்டும்படி கேட்டுக்கொண்டார்.

செயலாளர் திரு. எஸ். ஈ. அன்ரனி அவர்களின் நன்றியுரையுடன் விழா முடிவுற்றது.

எஸ். ஈ. அந்தோனி,
செயலாளர்.

---

## தேவ ஆலயம் செபத்தின்...

[7ம் பக்கத் தொடர்ச்சி]

கம் நமது வாழ்வினின்று நீங்கவேண்டும். பொருளாசையும் அதனால் வரும் கல்நெஞ்சுத்தனமும் அகல வேண்டும். அத்தி மரத்தைச் சபித்தபோதும் அதே பாடந்தான். பச்சிலையான வெளிவேடமல்ல, அன்பின் கனியான தியாகசேவை நமது வாழ்வின் விருட்சத்திலே காய்த்துக் குலுங்க வேண்டுமென்று விரும்புகின்றார் கிறிஸ்து.

தேவாலயத்தைத் துப்புரவாக்கியபோது தன்னை யார் என்று காட்டுகிறார். ஒழுங்கு முறையைக் கண்காணிக்கும் காவலரோ, தூதுவரோ போலல்ல, சொந்த உரிமைக்காரன் போலே பிதாவின் வீட்டை பெருக்குகிறார். தானே மெய்யான கடவுள் என்பதை இந்த ஒரே ஓர்மமான கிரியையினாலே எண்பித்து விடுகிறார். கடவுளின் வேலையான நீதித் தீர்ப்பையும் தன் மேலே எடுத்துக்கொள்ளுகிறார். உலகைத் திருத்த, தேவன் பக்கம் திருப்ப, விண் நின்று மண் வந்தவர் தனது வீட்டிலேயே வேலையைத் தொடங்குகின்றார்.

உலகாதாய மனிதர் ஆண்டவரின் ஆலயத்துள்ளேதான், உள்ள குப்பை கூழம் எல்லாம் அள்ளிவந்து தள்ளுகிறார்கள். இது ஆண்டவனுக்கு அநாசாரம், அகோரமான அநியாயம். கடவுள் இதைப் பொறுக்கலாமா? முடியாது. ஒறுக்கவேணும், நொறுக்கவேணும்.

கிறிஸ்து கூட்டித்தள்ளும் முதற் குப்பை அநியாயம். அறிவு குறைந்தோர், வலிமை குறைந்தோரை வடிவான வார்த்தைகளால் வஞ்சிக்கும் கயமைக்குக் கோவிலிலே இடமில்லை. பிதாவின் பிள்ளைகளை முகமன் பாராது நொந்தபோது தூக்குவது கடமை. அதைவிட்டு ஆசைகாட்டித் தாக்குவது

[9ம் பக்கம் பார்க்கவும்]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# கிறிஸ்தவ வாழ்வு

(தேவப்பிரியன்)

## 6. சரித்திரத்தின் அச்சாரம் கிறிஸ்து.

மலர்விழி நான் சொல்லப் போவதை விளங்கிகொள்வதற்கு மிகவும் கஷ்டமாக இருக்கும். ஆகவே தெளிவுற நீ விளங்கிக் கொள்ள வண்டுமென்று விரும்பினுல் உன் ஐம்புலன்களையும் அடக்கி நான் சொல்லப் போவதை அவதானத்துடன் கேட்கவேண்டும்.

உண்மையான கிறிஸ்தவ வாழ்க்கைக்கு கிறிஸ்துவே ஆதியும், மையமும், ஆக்கமுமாக இருக்கிருர் என்று கூறினேன். இதை உணர்ந்துகொள்ள நாம் ஆதிமனிதன் சரித்திரத்தை சற்று ஆராய்ந்து பார்க்கவேண்டும். அப்படி பார்க்கையில் நான் கூறப்போகும் உண்மைகள் தெளிவாகும்.

சமயம் என்பது மனிதன் உலகின் முகத்தே தோன்றியதன்று தோன்றுகிறது. மனிதன் தோன்றியபொழுது சரித்திரம் தோன்றுகிறது. சரித்திரம் **அர்த்தமுள்ள** ஒன்ருக தோன்றுவது எப்பொழுதென்ருல் கடவுளும் மனிதனும் சந்திக்கையில். இந்தச் சரித்திரத்தை அர்த்தமுள்ள சரித்திரம் என்று கூறுவதற்கு காரணம், இது மற்றைய சரித்திரங்களைப் போல் காலத்தால் அழிந்து போகாமல் என்றும் நிலை நிற்கும் ஒரு நிலையான கட்டிடமாக அமைவதால். ஏனெனில் இச்சரித்திரத்தில் மனிதனைப் படைத்துக் காத்து வழிநடத்திய கடவுள் அவனைச் சந்திப்பதற்காக தம்முடைய **பரம இரகசியத்தின் மறைவிடத்தில்** இருந்து அவனைச் சந்திக்க வருகிருர். தாமே மனமுவந்து தம்முடைய நன்மைத் தனத்தில் நம்மைப்பங்கு அடைய அழைக்கிருர். இதுதான் நான் இப்பொழுது உனக்குக் கூறப்போகும் கிறிஸ்துவை மையமாகக்கொண்ட, கிறிஸ்தவ வாழ்கை'!

மனிதன் உலகின் உற்பத்தியில் கடவுளைக் காண அல்லது அவருடன் உறவாட துடிக்கிருன். இந்தத் துடிப்பின் வேகம் பழைய உடன்படிக்கையில் பிதாப்பிதாக்களின் மூலமும் இறைவாக்கினர் வழியாகவும் ஓர் அளவு தணிக்கப்பட்டது, ஆனுல் புதிய உடன்படிக்கையில் கிறிஸ்துவில் தான் அது முற்ருக அமைதி அடைந்தது. இந்தச் சரித்திரம்தான் மீட்பின் சரித்திரம் அல்லது இரட்சிப்பின் வரலாறு எனச் சொல்லப்பட்டது. இதுவே கிறிஸ்துவை மையமாகக்கொண்ட சரித்திர வரலாறு. இதில்தான் கடவுள் மனிதனுடன் கொண்ட உறவின் பற்று முற்றுப்பெற்றது என கூறலாம். இறைவன் எங்களை இரட்சித்ததும் அவர் மூலமாகவே முற்றுப்பெற்றது. பரம இரகசியத்தில் மனிதன் பங்கு பற்றும் கொடை கிறிஸ்துவின் மூலமாகவே மனிதனுக்குக் கொடுக்கப்பட்டது. கிறிஸ்து — கடவுள்—மனிதனுக இருந்ததாலும், அவர் தம்மை எம்மைப்போல் ஆக்கிக் கொண்டதாலும்,

[10ம் பக்கம் பார்க்க]

## தேவ ஆலயம் செபத்தின்...

[9ம் பக்கத் தொடர்ச்சி]

கயமை. அடுத்து வரும் சூழம் துன் மாதிரிகை. தேவனைத் தேடிவந்த அந்நியரெல்லாம் ஆலயம் அளிக்கும் அஞ்ஞான கோலத்தைக் கண்டு, பக்தர் படும் ‌ாட்டைக் கண்டு, பேதலித்தே போனுர்கள். அந்நியரை ஆண்டவனிடம் அழைத்துப் போகவேண்டியவர்கள் இடறலாகக் குறுக்கே நிற்பது பெரிய பாதகம். ''சிறுவரை நம்மிடம் வரவிடுங்கள்'' என்ற யேசு தடையாக நின்றவரை அடிபோட்டு விரட்டியதில் அதிசயமா? மேலும், கடவுளின் ஆலயத்தைத் தங்கள் தேவைக்குக் குறுக்கு வழியாக்குவேர் கடவுளைக் காணுத கபோதிகளல்லவா? அவர்களுக்கும் கோவிலுக்கும் தொடர்பு என்ன? எனவேதான் அவர்களையும் துரத்தினுர் கிறிஸ்து.

வியாபாரத்தை வளர்க்கும் பலிகளுக்கு முற்றுப்புள்ளி வைக்க விரும்பினுர் யேசு. அன்பை வளர்க்கும் அரிய பலியையே நமக்கு அளித்துப் போனுர். நாமும் அவர் பின் செல்ல வேண்டும். ஆலய சேவை செய்ய வேண்டும். அதிற் படிந்த அழுக்கெல்லாம் அகற்ற வேண்டும். ஆண்டவன் அங்கு உவந்து உறைய வைக்கவேண்டும். பண்புடைய பிள்ளைகள் போல் அவன் முன்பு வளரவேண்டும். ★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

கிறிஸ்தவ வாழ்வு ....... ....

[9ம் பக்கத் தொடர்ச்சி]

அவரில் இறைவன் தன்னை அன்பின் முழுமையாக எமக்குக் காட்டிக்கொண்டதாலும், கிறிஸ்து நம் வாழ்வின் மையமாக விளங்குகிறார்.

ஆனால் இந்த உண்மையை நாம் உணர்ந்துகொள்ள விசுவாசம் என்ற அருட்கொடை எமக்கு அவசியமாகின்றது. இந்த விசுவாசமின்றி இரட்சணியத்தின் சரிதை எமக்கு எதுவித பயனையும் தராது. ஆகவே கிறிஸ்துவில் விசுவாசமே, அவர் எம் வாழ்க்கைக்கு ஆணிவேராய் அமைகிறார் என்பதை தெளிவுறுத்தும். இந்தக் கிறிஸ்துவைச் சுற்றியே விவிலிய காலம் பிரிக்கப்பட்டு இருக்கிறது. படைப்பின் முற்காலம்; இரட்சிப்பின் காலம்; பேரின்ப காலம். யூதர்களுக்கு நடுப்பகுதி, அதாவது இரட்சிப்பின் காலம் இன்னும் நிகழவில்லை என்றே சொல்லலாம். அவர்கள் இன்னும் கிறிஸ்துவை எதிர்பார்த்தவர்களாகவே இருக்கிறார்கள். இக்காலங்களைக்கொண்டு பார்க்கும்கால், கிறிஸ்துவே இதில் முக்கிய இடத்தைப் பெறுகிறார் என்பது வெள்ளிடைமலை. இப்புரட்சிகரமான எண்ணத்தினால்தான் நம் ஆதிகால கிறிஸ்தவர்கள் தங்களைச் சுற்றி வாழ்ந்தவர்கள் மத்தியில் ஒரு பெரும் பரபரப்பை ஏற்படுத்த முடிந்தது. இப்படி மனித சரித்திரத்தில் முதலிடம் வகிக்கும் கிறிஸ்து சரித்திரத்தின் ஆசிரியராகிய இறைவனுடன் ஒப்பிடுகையில் அவர் வகிக்கும் இடம் முதன்மை உடையதாய் இருக்கிறதா என்று பார்த்தால், ஆம் என்றுதான் சொல்ல வேண்டியவர்களாக இருக்கிறோம். ஏனெனில் **புனித** அருளப்பர் கூறுவதுபோல, ''ஆதியிலே வார்த்தை கடவுளாகவும் இருந்தார். அவர் **ஆதியிலே** கடவுளோடு இருந்தார். அவர் வழியாகவே **அனைத்தும்** உண்டாயின.'' (அரு 1/1–2) ஆகவே பிதாவுடன் ஒப்பிடும் பொழுது கிறிஸ்து அவருக்குச் சரிநிகர் சமானமாகத் திகழ்கிறார். புனித சின்னப்பர் கொலோசியருக்கு எழுதும் நிருபத்தில் கிறிஸ்துவே அரூபியாகிய கடவுளின் வெளித்தோற்றம் என்றும், படைப்பின் முதற் பொருள் என்றும், அவர் மூலமாகவே யாவும் படைக்கப்பட்டன என்றும் கூறுவதின் அர்த்தம் இதுதான். ஏனெனில் அவரே எல்லாவற்றிலும் முதன்மையாய் இருக்கிறார் என்பதைத் தெளிவுறுத்துவதே அவரின் எண்ணமாய் இருக்கிறது. 'மலர்விழி', கிறிஸ்துநாதர் கூட நாம் வாழ்ந்தபோது, தம்மைக் காண்கிறவன் தம் பிதாவைக் காண்கிறான் என்று கூறினார். தம் பிதாவைக் காட்டும்படி கூறிய பிலிப்பைப் பார்த்து கிறிஸ்து ஆச்சரியப்பட்டதிற்கும் இதுவே காரணமாய் அமைகிறது. ஆகையால் கிறிஸ்துநாதர் சரித்திரத்தில் வகிக்கும் முதலிடம் ஒரு தனித்தன்மை வாய்ந்தது.

கிறிஸ்துநாதரை உலகுடன் ஒப்பிட்டுப் பார்க்கையில் அதிலும் அவர் முதலிடம் வகிக்கிறார். அப்படி அல்லாவிட்டால் கடவுள் ஆதாம் ஏவாளின் பாவத்தின் பின்னால் தம்முடைய எண்ணத்தை மாற்றிக்கொண்டார் என்று கூற வேண்டியவர்களாக இருப்போம். இது முடியாத காரியம் ஏனெனில் கடவுள் மாறவும், மாற்றவும், மாற்றப்படவும் கூடாதவராய் இருக்கிறார், என்பது சத்திய வாக்காகும்.

''வேறு வார்த்தைகளில் கூறுவதென்றால் கிறிஸ்து இல்லாத உலகம் இல்லை என்பது தானே அர்த்தம் அப்பா.''

ஆம், மலர்விழி. ஒரு மறைவல்லுனர் கூறுவதுபோல் கடவுளுடைய 'கனவில்' கிறிஸ்து இல்லாத உலகம் இல்லை. உலகில் வாழ்பவர்கள் எல்லாம் கிறிஸ்துவால் நிறைவைப் பெற்று கிறிஸ்துவைப் போன்றவர்களாகி, முழு மனிதர்களாய்த் திகழ வேண்டுமென்பதே கடவுளின் கனவாக இருக்கிறது. கிறிஸ்துவே உலகின் ஆதி, உலகின் மையம், உலகின் முடிவு என்று கூறுவதற்கு இது ஒப்பாகும். இப்படியான வாழ்க்கை தொடங்கிவிட்டால் அங்கு 'அழுமூஞ்சிகளுக்கும்' 'தூங்கு மூஞ்சிகளுக்கும்' இடமே இருக்காது. கிறிஸ்துவுக்காகவே உலகம் இருக்கிறது. அவருக்காகவே மனிதர் படைக்கப்பட்டார்கள். அவராக வளரவே இரட்சிக்கப்பட்டார்கள். ஆகையால்தான் புனித சின்னப்பர், அவரில் தான் எல்லா ஞானமும் மறைக்கப் பட்டிருக்கிறது. அவரில் கடவுள் உருவமாக இருக்கிறார் என்றார். புனித சின்னப்பரின் கருத்துப்படி கிறிஸ்து இல்லாவிட்டால் இந்த உலகமே உப்புச் சப்பற்ற உலகமாக காட்சி அளிக்கும். கிறிஸ்துதான் உலகின் ஜீவநாடி, அதன் ஒளி, உலகின் மகா சக்தி ..................

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# கலப்பும் - கறையும் படிந்த இரத்தம்.

"திரு"

மனிதனின் வாழ்க்கையிலே அவனது இரத்தம் பெறும் பங்குபோன்று வேறெதுவும் பெறுவதில்லை. மனிதனை இன்னொரு மனிதனோடு ஒருமைப்படுத்தி, அவர்களுக்கிடையேயுள்ள பாசங்களுள் மிகவும் நெருங்கியதாக இணைப்பது அவனது இரத்த பாசம். மனிதர்களை சகோதரர்களாக மாற்றி அவர்களை ஒரு தாய் பிள்ளைகளாக்குவது அவர்களது தசையில் ஓடும் உதிரம். சாதி, மத பேதங்களால் மனிதனை மனிதன் உயர்ந்தவன், தாழ்ந்தவன் என்று வேறுபடுத்தும்போதும், அடிப்படையில் உயர்ந்தவன் தாழ்ந்தவன் என்ற பேதமில்லாத தனி மனிதன் என்று காட்டுவதும் இந்த இரத்தம்.

அன்றைய மனிதன் தன் தேவைகளுக்காகச் செய்துகொண்ட ஒப்பந்தங்களுள் மிகவும் வன்மையானதும், உன்னதமானதும் இரத்த ஒப்பந்தம். அது இருவருக்கிடையில் உள்ள காதலை உறுதிப்படுத்துவதாக இருக்கும் இரத்த ஒப்பந்தமாகவோ, சிநேகிதத்தை நிரூபித்துக் காட்டச் செய்ததாகவோ, அல்லது மனிதனுக்கும் தெய்வத்திற்குமிடையில் செய்யப்படும் ஒரு ஒப்பந்தமாகவோ இருந்தது.

தன்னைவிட உயர்ந்த தெய்வத்திற்கு தன் கீழ்ப்படிவைக் காட்ட மனிதன் புரிந்த கிரிகைகளில் மேலானது அவனது பலி — அதுவும் மனித பலி. வெறிகொண்ட தேவதைக்கு தன் அன்பைக் காட்ட விழைந்தது, மனிதன் பலிப்பீடத்தில் சிந்திய இரத்தம். தெய்வத்தை மட்டுமல்ல, மனிதனைக்கூட. வெற்றிவாகை சூட முனைந்தபோது, வெறிகொண்ட மனிதனது வேட்கையைத் தணிக்கவல்லதாக அமைந்தது, மனித சமுத்திரத்தின் இரத்தம் சிந்த உருண்ட தலைகளின் எண்ணிக்கை. இது மாமன்னர்களின் மங்காச் சரித்திரம் சொல்லும் இரத்தச் சித்திரம். அவர்களின், இரத்தத்தினை இரணயமாக்குவதிலும் தங்கியிருந்தது.

பழம் புராணங்களை விட்டு இன்றைய புதுவுலகில்கூட மனிதனுக்கு வேண்டியது இரத்தம் - இரத்ததானம். வேகமாக ஓடிக்கொண்டிருக்கும் வாகனங்களால் புரண்டவர்களுக்கும், காயப்பட்டவர்களுக்கும் முதன் முதலில் வைத்தியர்கள் செய்யக்கூடிய ஒரு மாபெரும் உதவி, உயிரையே திரும்ப அளிக்கக்கூடிய செயல், அடிபட்டவர்களுக்கு இழந்த இரத்தத்தை அளிக்கவல்ல இரத்த தானம். எவ்வியாதிக்கும் வேதனையைக் குறைக்கவல்லது இன்றைய "வெட்டிக்கிழிப்பது". அதற்கும் இன்று தேவைப்படுவது நிறைந்த — தகுந்த இரத்த தானம்.



இந்த இரத்தத்தைக் குறித்து இரவு பகலாக எழுதிக்கொண்டேயிருக்கலாம். பெத்லெகேம் மாட்டுத் தொழுவின் கருணை பொழியும் இறைமகன் யேசுவின் உடலிலே ஓடிய குருதிதான் பிற்பாடு அருளைப்பொழிய வாரி வாரிச் சிந்தியது. சிலுவையின் மரணத்தைக் கண்டு பூங்காவில் வியர்வையாகவும், கற்றூணிலே கசையடியினால் வெள்ளமாகவும், சிலுவையிலே ஆணிகளினால் ஆறாகவும் ஓடியது. இரத்தம் உயிருக்குச் சமம். அந்த உயிரையே நமது உணவாகக் கொடுத்து தனது தெய்வீகக் காதலை நிரூபித்தார் கிறீஸ்து கடைசி இராவுணவில். அன்பர்களோடு ஒன்றிக்க விழைந்தவருக்கு இரத்தத்தையும் தசையையும் போல இணைக்கவல்லதெதுவும் தென்படவில்லை. உயிரைவிட்டு உயிரைவிட மேலான ஒன்றிப்பைப் பெற்றார்.

பிறரின் அன்பைப்பெற, கிறிஸ்து சிந்த இருந்த இரத்தம் இராச குல இரத்தத்தைச் சேர்ந்தாலும் — தூய கலப்பற்ற இரத்தம் அல்ல. ஒரு இனத்திற்காகவல்ல, முழு மனிதர்களின் மாசுகலந்த, கறை படிந்த உள்ளத்தை தூய்மையாக்கவந்த அவரது உடலிலே கலப்பு கறைபடிந்த இரத்தம் ஓடியது. அதனால் பிறக்கும்பொழுதே தன் குல

(12ம் பக்கம் பார்க்கவும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

## கலப்பும் - கறையும்......

(11ம் பக்கத் தொடர்ச்சி)

முன்னோர்களின் கலப்பு நிறைந்த இரத்தத்தை மட்டுமல்ல, முழு உலக மக்களின் கறை படிந்த இரத்தத்தையும் சுமந்துகொண்டார்.

யூதாவின் இராசகுலத்திலே உதித்தாலும், கலப்பில்லாமல் தூயதாகவிருந்த குலமல்ல தாவீதின் கோத்திரம். தாவீதுவின் பாட்டி றூத் — ''மொவாபிற்'' குலத்தைச் சேர்ந்த வள். கடவுளால் தெரிந்துகொள்ளப்பட்ட இவ்விராச குலத்திலே இவள் குலம் கலக்கப் பட்டது. யூத குலத்தின் மகிமையாக விளங் கப்பட்ட சலமோன் அரசன்கூட தாவீது மன்னனுக்கும் அவனது படைத் தலைவன் ஊறியாவின் மனைவிக்குமிடையே ஏற்பட்ட உறவினால் பிறந்தவனே — ஆகவே யூத இராச குலத்தில் பிறந்தாலும், கிறிஸ்துவின் இரத் தத்தில் அந்நிய குல இரத்தமும் கலக்கப்பட் டது. ஆகவே யாருக்காக தம் இரத்தத்தைச் சிந்த வந்தாரோ அவர்களுடைய இரத்தமும் அவரது தசையில் ஊறியிருந்தது. அது தூய தனி யூதகுல இரத்தமல்ல.

அந்த இரத்தம் கறைபடிந்ததும்கூட: கிறிஸ்துவின் முன்னோர்களின் வாழ்க்கை ஏட்டை ஆராய்ந்து பார்த்தால் அது தானாகப் புரியும் — கடவுளால் அவர் குலம் தெரிந்து கொள்ளப்பட்டாலும் அவர்கள் வாழ்வு களங்கமற்றிருக்கவில்லை. அதற்கு மாறாக அவர்கள் கைகள் இரத்தக்கறை படிந்திருந் தன. எனவே அவர்கள் வழித்தோன்றல் கிறிஸ்து பிறக்கையில் அவரது இரத்தம் மாசு படிந்திருந்தது. இதையே சின்னப்பர் கூறு கின்றார் ''கடவுள் தன்மையில் விளங்கிய அவர் கடவுளுக்கு இணையாயிருக்கும் நிலையை விடாமல் பிடித்துக்கொண்டிருக்க வேண்டிய தொன்றாகக் கருதவில்லை. ஆனால் தம்மையே வெறுமையாக்கி, அடிமையின் தன்மை பூண்டு மனிதருக்கு ஒப்பானார். மனித உருவில் தோன்றி, தம்மைத் தாழ்த்திச் சாவை ஏற் கும் அளவுக்கு, அதுவும் சிலுவைச் சாவையே ஏற்கும் அளவுக்குக் கீழ்ப்படிபவரானார்'' (பிலி. 2 / 6 - 8)

கிறிஸ்துவின் உடலிலே ஓடிய கலப்பும், கறையும்படிந்த இரத்தம் அவரில் பாவ மாசி னைக் காட்டவில்லை. அவரது அன்புப் பிதா விடுத்த பணியைக் காட்டியது. ஒரு குலத்த வருடையவல்ல, உலக மக்களின் இரத்தக் கறை படிந்த வாழ்க்கையை தமது விலை மதிக்கப்படாத குருதியால் தூய்மையாக்க இவ்வுலகிற்கு வந்தார். அவரது இரத்தம் அவரது வாழ்க்கைக்குச் சமன் — அவ்வாறாயின் ''நான் உலகிற்கு வந்தது பலருடைய மீட் புக்கு விலையாக என் உயிரை அளிக்க'' (மத். 20, 28), என்ற அவரது கூற்று உண்மை யானதே!

## மண்ணகமடந்தை......

[1ம் பக்கத் தொடர்ச்சி]

என இலக்கியங்களும், இதிகாசங்களும் கூறுகின்றன. ஒருவன் தன் நண்பனுக்குப் பொருளைக்கொடுப்பான், பொன்னைக்கொடுப் பான், நாட்டைக்கொடுப்பான். தன் உயிர் என்றதும் பின்வாங்குவான், சிந்திக்கத்துவங் குவான். உயிர் வாழ யாருக்குத்தான் ஆசை இருக்காது. ஆனால், கிறிஸ்துவோ பின் வாங் கவில்லை. ''உயிரைக்கொடுக்கவும், எடுக்கவும் எனக்கு அதிகாரம் உண்டு'' என்று கூறி, தாமாகவே தமது உடல், உயிர், ஆவி அனைத் தையும், நாம் வாழ அளித்தார்.

**வீர மரணம் — தெய்வீக மரணம்**

மரணம் ஒவ்வொருவருக்கும் முக்கிய மானது. அது ஒரு முடிவுக்கு முத்திரை இடு கிறது. உலகத்திலே ஏற்பட்ட மரணங்கள் அனைத்திலும், அதிமுக்கிய மரணம் கிறிஸ்து வின் மரணம். அது இரட்சிக்கும் ஆற்றல் கொண்ட மரணமாகும். அவனியில் அவத ரிக்கும் ஒவ்வொருவரும் வாழத்தான் பிறக் கிறார்கள். ஆனால், கிறிஸ்துவோ இறக்கப் பிறந்தார்; தனது 'நேரம்' ஆகிய மரணத் தைத் தழுவ ஒவ்வொரு நிமிடமும் துடியாய் துடித்துக்கொண்டிருந்தார். மரணம் அவரின் வாழ்வின் மணிமகுடமாகவும், மகிமையின் கிரீடமாகவும் இருந்தது. ''சிலுவை மரத் திலே தொங்கிக்கொண்டு அனைத்துலகின் மீதும் அன்பின் ஆட்சி புரிகின்றார்.'' மனுக் குலத்துக்கும், சமுதாயங்களுக்கும், வல்லரசு களுக்கும் பெரிய நீதிபதியாயிருந்துகொண்டு நீதி வழங்குகிறார்.

சிலுவை என்னும் மேடையிலே கிறிஸ்து ஏழு வார்த்தைகளைப் பேசினார். அதில் ஒரு வார்த்தை, நல்ல கள்வனுக்கு பேரின்ப வாழ்வை அளிப்பதாகக் கூறிய உறுதிமொழி. நல்ல கள்வன் இயேசுவைப் பார்த்து ''இயே சுவே, உம் அரசுக்கு வரும்போது என்னை நினைவு கூரும்,'' என்றான். அவனுக்கு இயேசு, ''இன்று நீ என்னோடு வான் வீட் டில் இருப்பாய் என்று நான் உறுதியாக

[14ம் பக்கம் பார்க்கவும்]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# மாணவர் மன்றம்

## புனித லூக்காஸ் சுவிசேசம்

(ஊ) உவமைகள் மூலம் போதித்தல்.

இறை அரசை ஸ்தாபித்ததிலிருந்து, இயேசு அதன், வளர்ச்சியையும், வெற்றியையும் புதுமைகளினால் நிரூபிக்கின்றார் கடவுளின் அரசு பற்றி, பற்பல விதங்களில், மக்களுக்கு உவமைகளாகக் கூறினார். அவற்றில் கடுகு விதை, புளிப்பு மா உவமைகளை, ஒரு சோடியாக, லூக்காஸ், தம் சுவிசேசத்தில் கொடுக்கின்றார்.

விண்ணரசின் வளர்ச்சி, தன்மை, அதன் விரிந்து பரம்புவதற்குரிய சக்தி என்பவற்றை விளக்க, இயேசு, **கடுகுவிதை உவமையைக்** கூறினார். இறை அரசு, உலகசரித்திரத்தில், ஒரு முக்கிய அம்சமாக மாறுவதினால் உண்டாகும் அளவில்லாத மகிழ்ச்சியையும், மதிப்பையும் எடுத்துக் காட்ட **புளிப்பு மா உவமை**யைக் கூறினார். மேலும், இயேசு, கடுகுவிதை உவமையை உரைத்து, அவரின் எதிரிகளின் குறுகிய மனப்பான்மையையும், கடவுள் அரசின் பரந்த நோக்கத்தையும் ஒப்பிட்டுக் காட்டுகின்றார். கிறிஸ்துவின் மறை உடல், கடுகு செடியைப் போன்று, எல்லா நாட்டு மக்களையும் கவர்ந்திழுக்கின்றது, (Absorbs). கிறிஸ்துவின் நற்செய்தி, புளிக்காரத்தைப் போன்று சீக்கிரமாக, ஆனால் முழுமையாக, ஊடுருவிச் செல்லும் Permeates) சக்திவாய்ந்தது.

**கடுகுவிதை உவமை**
13, 18–19

இவ் உவமை மாற்கு, மத்தேயு சுவிசேசங்களிலும் காணக்கிடக்கின்றது. கடுகுவிதை மிகவும் சிறியது என்று, மாற்கு மாத்திரம் கூறுகின்றார். உண்மையாகவே, அது மற்றெல்லா விதைகளிலும் சிறியது என்று கூற முடியாது. சில சமயம், இவர், தனக்கு விளங்கினமாதிரி இவ் உவமையைக் கூறியிருக்கலாம். அதாவது: இச் செடி வளர்ந்து, மற்றெல்லாச் செடிகளிலும் பெரிதாகி, தன் கிளைகளினுள் பறவைகள் தங்கக்கூடிய வசதியுடையுதாக மாறுகிறது. இதேபோன்று, மிகச் சிறிய அளவில் ஆரம்பித்த இறை அரசு, நாளாவட்டத்தில் ஒரு மாபெரும் சாதனமாக மாறி மக்களனைவரையும் தன்னகத்துள் கொள்ளக்கூடிய ஒரு இடமாக மாறும். இயேசுவின் இரண்டாம் வருகையுடன், இது முற்றுப் பெறும், என்றும் அவர் நினைத்திருக்கலாம்.

இந்த உவமையைச் சரியாக விளங்க வேண்டின், பழைய ஏற்பாட்டில், **தானியேல் ஆகமம் 4, 12: எசெக்கியேல் ஆகமம் 31, 6: 17, 23** என்பவற்றில் கூறப்பட்டிருக்கும் வசனங்களுடன் ஒப்பிட்டுப் படிக்கவேண்டும். அரசியல் ஆதிக்க மோகம் கொண்டிருந்த அந்த நாளில், சிறிய நாடுகள் பெரிய சாம்ராட்சியங்களுக்குள், அரசியல் தஞ்சம் புகுவதை விளக்கிக் காட்ட, ஒரு பெரிய மரக்கொப்புகளில், பறவைகள் ஆறுதல் தேடுவதை, உவமையின் மூலம் இறைவாக்கினர் எடுத்துரைத்தனர்.

கிறீஸ்துவின் முதல் வருகையுடன், இறை அரசு ஆரம்பித்து, அது வளர்ந்து கிறீஸ்துவின் இரண்டாம் வருகையுடன் முற்றுப் பெறும் என்று, ஒரு காலத்தில் இந்த உவமைக்கு விளக்கம் கூறப்பட்டிருந்தது இது அவ்வளவு இயற்கையான விளக்கமாகவோ, அல்லது இயேசு, எமக்கு விளக்க நினைத்த மாதிரியாகவோ இருக்காது. அரசியல் ஆதிக்க ஆசையிருந்த அந்த நாட்களில், இறை அரசு, இரகசியமாக, அரசியல் மகிமை பெருமையின்றி, வளர்ந்துகொண்டே யிருந்தது. விசுவாசக் கண்கொண்டு பார்க்கிறவர்களால், அதன் பிரசன்னத்தைக் கண்டுபிடிக்க முடியும். விண்ணரசில் யூதரல்லாத மக்களும் பங்குபற்றுவார்கள் என்று இயேசு கூறினார்.

உலக சரித்திரத்தில், கிறீஸ்துவின் வருகை, ஒரு திருப்பமாக, ஒரு புது அத்தியாயமாக அமைகின்றது. இது கடவுளால் கொண்டு வரப்பட்ட மாற்றமே தவிர, மனித முயற்சியினால் கொண்டுவரப்பட்ட ஒரு மாற்றம்

[14ம் பக்கம் பார்க்கவும்]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

## மாணவர் மன்றம்......

*(13ம் பக்கத் தொடர்ச்சி)*

அல்ல. இது காரணமாக, இயேசுவின் வருகையுடன், உலகத்தின் கண், ஒரு ''குழப்பம்'' [CRISIS] தோன்றியுள்ளது. இக் ''குழப்பம்'' எதிர்பாராத ஒன்று அல்ல. இறந்தகால, எதிர்கால சரித்திரத்துடனும், இஸ்ருயேல் மக்களின் சரித்திரத்துடனும் மிக நெருங்கிய தொடர்பு கொண்டுள்ளது.

இறை அரசு ஸ்தாபித்ததிலிருந்து, நாம் திட்டவட்டமான ஒரு முடிவை எம் வாழ்க்கையில் எடுக்க வேண்டும். கிறீஸ்துவின் பக்கம் சாரல் வேண்ம்; அல்லது அவருக்கு எதிராகமாறி, உலகத்தின் பக்கம் சாரல் வேண்டும். இரண்டிற்கும் ஊழியம் செய்ய முடியாது. ''உங்களுக்கு எதிராக இல்லாதவன், உங்கள் சார்பாக இருக்கிருன்'' என்று இயேசு கூறினர் (லூக். 9,50)

**புளிப்பு மா உவமை**
**13, 20—21**

இவ் உவமை, மேற்கூறப்பட்ட உவமையின் சோடிதாஞ என்பது நிட்சயமில்லை. மாற்கு சுவிசேசத்திலிருப்பது போன்று, கடுகு விதை உவமையை, 'தாஞக முளைத்து வளரும் விதை' உவமையுடன் சேர்த்தால், **புளிப்பு மா உவமை** தனிமையான ஒன்ருகப் பிரிக்கப்படுகின்றது.

மாவில் புதைக்கப்பட்ட புளிக்காரம், முதலில் மறைந்திருந்த போதிலும், கூடிய விரைவில், அதை ஊதச்செய்து, புளித்த மாவாக மாற்றுகின்றது. அதே போன்று, இறை அரசைப் பொறுத்த மட்டில், இயேசுவின் வாழ்க்கையுமிருந்தது. எதுவிதமான வெளி ஆடம்பரமுமின்றி, இறை அரசு உள்ளே (WITHIN) ஆரம்பித்தது. ஆனல் நாளாவட்டத்தில், அது யூத சமயத்துக்கு(JUDAISM) மேல் ஓங்கி வளர்ந்து விட்டது. எனவே, ''கடவுளின் அரசு.... இதோ, உங்களிடையே உள்ளது'' (லூக். 17, 21) என்கிருர் ஆண்டவர்.

வேதாகமத்தில் பல இடங்களில், கெடுதியின் பொருளாக, புளிக்காரம் வர்ணிக்கப்பட்டுள்ளது. இங்கே, இவ் உவமையில் அந்த அர்த்தத்தில் அல்ல. ஆனல் எவ்வளவு **கெதியாகவும், வல்லமையுடனும்,** தன் அலுவலை, இரகசியமாக, புளிக்காரம் செய்கிறது, என்பதைக் காட்டுகின்றது. இதே போன்ற நிலைமை, மனித சமுதாயத்தில், **நற்செய்தி**யைப் போதிக்கும் பொழுது ஏற்படுகின்றது. திருமுழுக்கின் மறுபிறப்பினுல் பிறந்த ஆத்து மத்திலும், **தேவப்பிரசாதம்** இவ்வண்ணம் வேலை செய்கின்றது.

மறை உடலின் அங்கத்தவர்கள் ஒவ்வொருவரும், தத்தம் சூழ்நிலையில் **புளிக்காரத்தைப்** போன்று இருக்க வேண்டும். புளிக்காரம் மாவைப் புளிக்க வைக்காவிடில், அதனுல் எதுவித பயனுமில்லை. கிறீஸ்தவன் தன்னைச் சூழ்ந்துள்ள மக்கள் மத்தியில், புளிக்காரத்தைப் போல இருக்காவிடில், ''கிறீஸ்து அவன்'' என்ற பெயருக்கே அவமானம். ✶

---

## மண்ணகமடந்தை......

*[12ம் பக்கத் தொடர்ச்சி]*

உனக்குச் சொல்கிறேன்'' என்ருர். மரணப் படுக்கையில் இருக்கும் ஒருவன், இறக்கவிருக்கும் இன்னெருவனுக்குத் தன் அரசில் புது வாழ்வு கொடுப்பதாக நீங்கள் எந்த நூலிலும் வாசித்ததுண்டா; படித்ததுண்டா? உலக வரலாற்றில் கேள்விப்பட்டதுண்டா? இல்லை, இல்லை, என புத்தி எமக்கு இடித்துரைக்கிறது. ஆனல், கிறிஸ்துவின் மரணத்திலே அது நடந்து விட்டது. அப்படியாயின் சிலுவையிலே தொங்கும் இவர் தெய்வீக மகன் அன்றி வேறு எவருமில்லை.

***வாழேந்திப் போர் புரிந்த வாகையரும் மாண்டுவிட்டார். வாளேந்தாக் கிறிஸ்துவே, நீ மரித்தும் வாழ்கின்ருய்!***

''நண்பகல் முதல் மூன்று மணிவரை நாடெங்கும் இருள் உண்டாயிற்று'' உலக மக்களின் தீபமாகிய கிறிஸ்துவின் மரணத்தை அறிந்த கதிரோன் துக்கம்கொண்டு ஒளிகொடா நின்ருன். ''ஆலயத்தின் திரை மேலிருந்து கீழ்வரை இரண்டாகக் கிழிந்தது, நிலம் நடுங்கியது. பாறைகள் வெடித்தன. கல்லறைகள் திறக்கப்பட்டன. ''தந்தையே, உமது கையில் என் ஆவியை ஒப்படைக்கிறேன்'' என்று இயேசு உரக்கக் கூவி உயிர் நீத்தார்.

மண்ணக மடந்தை வான் துயர் கூர,
விண்ணவர் துன்ப சமுத்திரத்தில் மூழ்க,
உலகின் ஒளியாகிய கிறிஸ்து தன் இன்
னுயிரை மன்பதையோர்க்காக
அளித்தார். ✶

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

## மாணவர் மன்றம்

# கிறிஸ்தவ போதக வழிகாட்டி

பகுதி ''அ'': மனிதன்மேல் கடவுளின் அன்பு.
அலகு 1 : கடவுளும் அவரின் குணங்களும்.
பாடம் 4 : கடவுள் தீமையிலிருந்து நன்மை உண்டாகச் செய்கிறுர்.

இப்பாடம் கத்தோலிக்க திருமறை விளக்கத்தின் 10வது பாடமாகும்.

**சிந்தித்துப்பார் (விடைகள்):**

1. நன்மை செய்யுமாறு கடவுள் நம்மைத் தூண்டுகிருர்.
2. நமக்குச் சுயாதீனம் என்னும் பெரும் வல்லபம் இருப்பதால்
3. ஏனெனில் அவர் எல்லாம் வல்ல இறைவன் தீமையினின்றும் நன்மை உண்டாகச் செய்ய அவரால் கூடும்.
4. கிறீஸ்து நாதருடைய சிலுவை மரணத்தினுல் பசாசு முறியடிக்கப்பட்டது; உலகம் பாவத்தினின்றும் நித்திய சாவினின்றும் விடுவிக்கப்பட்டது.

**பயிற்சிகள்:**

(''ஆ'' பகுதியிலுள்ளதை ''அ'' பகுதியிலுள்ளதோடு பொருத்தி எழுதுக)

''அ''

1. கடவுள் நன்மை செய்யத் தூண்டி.
2. உலகிலுள்ள தீமைகள் அனைத்தும்.
3. தீமையிலிருந்து நன்மை வரச்செய்ய அவருக்குத் தெரியுமாதலால்.
4. நம் வாழ்க்கை ஒரு சோதனைக் காலமாய் இருப்பது.
5. கடவுளுடைய திட்டங்களில்.

''ஆ''

1. அவர் தீமையை அனுமதிக்கிருர்.
2. கடவுளின் சித்தம்,
3. தீமை குறுக்கிட்டு வெல்லவே முடியாது.
4. தீமையை விலக்க எச்சரிக்கிருர்.
5. கடவுள் சித்தத்திற்கு அப்பாற்பட்டவையல்ல.

பாடம் 5: கடவுள் நம்மைத் துன்பத்தின் வழியாக ஈடேற்றத்திற்கு நடத்திச் செல்கிருர்.

இப்பாடம் கத்தோலிக்க திருமறை விளக்கத்தின் 11வது பாடமாகும்.

**சிந்தித்துப்பார் (விடைகள்):**

1. துன்பமும் சாவும் கடவுளிடமிருந்து வருகின்றன.
2. துன்பத்தின் வழியாக நம்மை ஈடேற்றத்துக்கு அழைத்துச்செல்லும் வண்ணம் நமக்குத் துன்பத்தை வரவிடுகின்றுர். ஒருவன் பொன்னைத் தீயிலிட்டு தூய்மைப்படுத்துவது போல கடவுள் நம்மையும் தூய்மைப்படுத்த துன்பத்தை நமக்கு அனுப்புகிருர். நோய், வறுமை, இன்னும் பிற தொல்லைகளைக்கொண்டு நம்மை நமது குற்றங்கறைகளினின்றும் கழுவி ஈடேற்றத்திற்கு அழைத்துச் செல்ல விரும்புகிருர்.
3. துன்ப வேளையிலும் நாம் கடவுளின் சித்தத்தை நிறைவேற்றுகிறேம் என்று காட்ட வேண்டும். துன்பம் கடவுளால் நமக்கு அனுப்பப்பட்டது என அதைப் பொறுத்துக்கொள்ளும் போது நாம் கிறீஸ்துநாதரைப் போல் ஆகிறேம்.
4. துன்பம் கடவுளிடம் இருந்து வருகின்றது, என எண்ணி, நாம் அதை பொறுத்துக் கொள்வோமானுல் கிறீஸ்துநாதர் கூறியபடி நடக்கும். அதாவது, ''என்னைப்பற்றி மனிதர் உங்களைச் சபித்து, துன்பப்படுத்தி, உங்கள் மேல் சகல தீமைகளையும் அபாண்டமாய்ச் சொல்லும் போது நீங்கள் பாக்கியவான்கள்''.

**பயிற்சிகள்:** (கீறிட்ட இடங்களில் ஏற்ற சொல் வைத்து நிரப்புக)

1. கடவுள் இஸ்ராயேலருக்கு அனுப்பிய.......... .......... அவர்களுக்கும் பிறமதத்தாருக்கும் ஒரு .......... ..........மாறிற்று.

2. நம்முடைய சொந்தப்பாவங்கள் நமக்கும் பிறருக்கும்...... ..........விளைவிக்கின்றன.

[16ம் பக்கம் பார்க்க]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

**மாணவர் மன்றம் ... ... ...**

[15ம் பக்கத் தொடர்ச்சி]

3. துன்பம் ......... இவைபற்றிக் கடவுள் இன்பம் கொள்வதில்லை.

4. கடவுள் ............. வழியாக நம்மை ............ அழைத்துச் செல்ல விரும்புகிறார்.

5. துன்பங்களை நாம் தகுந்த முறையில் சகிக்கும்போது கடவுளின் ................. நிறைவேற்றுகிறோம்.

**பாடம் 6: கடவுள் பாவிகள்மேல் இரக்கம் கொண்டுள்ளார்.**

இப்பாடம் கத்தோலிக்க திருமறை விளக்கத்தின் 13வது பாடமாகும்.

**சிந்தித்துப்பார் (விடைகள்):**

1. பாவிகள் ஈடேற்றம் அடையவேண்டுமென்பதே கடவுளின் சித்தம். அவர் இதை எசெக்கியல் 22ம் அதிகாரம் 14ம் வசனத்தில்: "நாம் சீவனைக் கொண்டு ஆணையிடுகிறோம். பாவியுடைய மரணத்தை நாம் தேடுவதில்லை. அவன் தன் தீய வழியை விட்டு மனந்திரும்பி பிழைக்க வேண்டும் என்பதையே விரும்புகிறோம்" என்று கூறியுள்ளார். லூக்காஸ் 19ம் அதிகாரத்தில், 10ம் வசனத்தில் 'சிதறிப்போனதை தேடி இரட்சிக்கவே இறைவன் தமது சொந்த மகனை உலகிற்கு அனுப்பிவைத்தார்' என்று கூறிகிறார்.
2. மனஸ்தாபப்பட்டுத் தவம் புரியும்படி கடவுள் பாவியை அழைக்கிறார். அவன் தன் பாவத்தை உணரச்செய்கிறார். அத்துடன் அவனுடைய மோட்ச தந்தையின் வீட்டின்மீது ஏக்கத்தை அவன் உள்ளத்தில் தட்டி எழுப்புகிறார். பாவிகள் மனம்மாறி தம் பாவங்களுக்காக மனஸ்தாபப்படும் வண்ணம் வழக்கமாய் நீண்ட காலம் விட்டுக்கொடுக்கிறார்.
3. ஒருவன் தன் பாவங்களுக்காக மனஸ்தாபப்படும் பொழுது கடவுள் அவனுக்கு மன்னிப்பை அளிக்கிறார். அவன் மீது கருணையுடன் கண்ணோக்குகிறார். மீண்டும் அவனைத் தம் சொந்தப் பிள்ளையாக ஏற்றுக்கொள்கிறார்.

**பயிற்சிகள்:**

(சரியாயின் சரி என்றும், பிழையாயின் பிழை என்றும் குறிப்பிடுக).

1. துன்பம், சாவு இவைபற்றி கடவுள் இன்பம் கொள்வதில்லை.
2. துன்ப வேளையில் நாம் கடவுளின் சித்தத்தை நிறைவேற்றுவதாகக் காட்டத் தேவையில்லை.
3. நமது சொந்தக் குற்றத்தை நாம் கண்டுணர துன்பம் அவசியம் இல்லை.
4. பாவத்திற்கு மன்னிப்புப் பெற மனஸ்தாபப்படவேண்டும்.
5. நம் பாவங்களுக்குத் தவம் புரிய வேண்டியதில்லை.

★


## புனித இக்னேசியாருக்கு சிலை எழுப்ப நிதி.

சேசு சபைக் குருமார் திருகோணமலை மட்டக்களப்பு மேற்றிராசனத்தில் 75 வருடம் பணியாற்றியதன் ஞாபகார்த்தமாக மட்டக்களப்பில், யேசுசபையின் ஸ்தாபகர் புனித இக்னேசியஸ் லேயலாவின் சிலையொன்று நிறுவப்பட வேண்டுமெனப் பலரும் விரும்புகின்றனர்.

சிலையமைக்க யேசு சபைக் குருமார் நடாத்திய கல்லூரிகளின் பழைய மாணவர்கள், அன்பர்கள், ஆதரவாளர்களிடமிருந்து பொருளுதவியை எதிர்பார்க்கிறோம்.

பணம் அனுப்பவேண்டிய முகவரி:

**மான்புமிகு வ. தியோகுப்பிள்ளை,**
துணை ஆயர்,
ஆயர் இல்லம், மட்டக்களப்பு.

**A. W. அரியநாயகம்**
செயலாளர்,
தி. ம. மே. ஐக்கிய சங்கம்.


இப்பிரசுரம் மட்டக்களப்பு 18, மத்திய வீதியிலுள்ள கத்தோலிக்க அச்சகத்தில், மனேஜர் யோசேப் B. மறே S.S.J. அவர்களால் அச்சிடப்பட்டு, மகா வந். தியோகுப்பிள்ளை, துணை ஆயர், மட்டக்களப்பு. அவர்களால் 1-4-71ல் வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media